**சார்பு நீதிமன்றம், மேலூர்**

நாள்*: 26.03.2026*

ம.சா.*1* –கருப்பையா *S/o* வெள்ளைச்சாமி

*MCOP No.23/2024*

*(*சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.*)*

*2*ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை *:*

விபத்து தொடர்பாக காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் என் மனைவி நெவ்வாயி புகார் கொடுத்தார். குற்ற வழக்கு என்னவாயிற்று என்று தெரியுமா என்றால் தெரியவில்லை. நான் கீழவளவில் இருந்து பாப்பாகுடிபட்டி நோக்கி நான் நடந்து சென்றுகொண்டிருந்தேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனமானது, பாப்பாகுடிபட்டி ரோட்டில் இருந்து கீழவளவு செல்லும் சாலையில் வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். நான் எவ்வளவு அடி துாரத்தில் மோட்டார் சைக்கிள் வருவதை பார்த்தேன் என்றால் நான் நடந்து சென்று கொண்டிருந்த போது பின்னால் வந்து இருசக்கர வாகனம் மோதிவிட்டது. இருசக்கர வாகனம் சரியான திசையில் தான் வந்து கொண்டிருந்தது என்றும் நான் தான் இருசக்கர வாகனம் வருவதை கவனிக்காமல் குறுக்கே சென்று விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனக்கு விபத்தில் எலும்புமுறிவு எதுவும் ஏற்படவில்லை என்றால் மண்டை உடைந்து எனக்கு காதுவலியாக ரத்தம் வந்துவிட்டது. எனக்கு அறுவைசிகிச்சை எதுவும் மேற்கொள்ளப்பட்டதா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்த பில்கள் அனைத்தையும் உரிய மருத்துவ அலுவலரை சாட்சியாக விசாரித்து நிருபிக்க முடியுமா என்றால் முடியும் நான் தற்போது வேலைக்கு செல்லவில்லை வீட்டில் தான் இருக்கிறேன். நான் விவாசயம் செய்வதற்கோ, பால்வியாபாரம் செய்வதற்கோ, மாத எவ்வளவு வருமானம் ஈட்டி வருகிறேன் என்பதை

நிருபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து எனது கவனக்குறைவினால் ஏற்பட்ட காரணத்தினால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடு தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.03.26 10:00:44 +0530

*Sub Judge*
*Melur*